தமிழ்நாடு அரசு

# மூன்றாம் வகுப்பு

## முதல் பருவம்

தொகுதி I

# தமிழ்

# ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

**பள்ளிக் கல்வித்துறை**

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - *2019*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

**விற்பனைக்கு அன்று**

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல்
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
நிறுவனம்

*© SCERT 2019*

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

# முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றி படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்

பாடநூலின் புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# நாட்டுப்பண் - பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்கைளக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.
நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.
நின் திருப்பெயர் விந்திய, இமயமைலத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலைலகளால் வணங்கப்படுகிறது.
அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகைழப் பரவுகின்றன.
இந்தியாவின் இன்ப துன்பங்கைளக் கணிக்கின்ற தாயே! உனக்கு


வெற்றி! வெற்றி! வெற்றி!



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# தமிழ்

## மூன்றாம் வகுப்பு

### முதல் பருவம்

தொகுதி 1



# முன்னுரை


**குழந்தைகள் பூ போன்றவர்கள்! அற்புதமானவர்கள்!**

அவர்கள் பல்வேறு சூழல்களிலிருந்து பள்ளிக்கு வருகின்றனர்.
ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் என்னும் முத்தைத் தன்னகத்தே கொண்ட சிப்பிகள்.
அச்சிப்பிகளுக்குள் பொதிந்து கிடக்கும் திறனாகிய முத்துகளைக் கண்டு வெளிக் கொணர்வதே உண்மையான கல்வி.



தமிழையும் தமிழர்களையும் போற்றும் வகையில் அமைந்துள்ளதுடன் குழந்தையின் விருப்பம், மனவளர்ச்சி சமுதாய நோக்கு, பண்பாடு முதலியவற்றையும் கருத்தில் கொண்டு இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் குழந்தைகளின் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணப் படங்கள், நற்பண்புகளை வளர்க்கும் கதைகள், படக்கதைகள், இசையோடு ஓசை நயமிக்க இனிய பாடல்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன.

மேலும் குழந்தைகள் தயக்கமின்றித் தமது எண்ணங்களை வெளிப்படுத்த உதவி புரியும் வாங்க பேசலாம்.





குழந்தை வகுப்பறைச் சூழலைத் தாண்டி சிந்திப்பதுடன் அதனை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ள உதவும் சிந்திக்கலாமா?

குழந்தைகள் விளையாடிக் கொண்டே தங்களது மொழித் திறனை வளப்படுத்திக் கொள்ள உதவும் மொழியோடு விளையாடு.












ஒவ்வொரு குழந்தையின் படைப்புத் திறன், புதியன உருவாக்கும் சிந்தனை, ஆகியற்றை வளர்க்க உதவும் **கலையும் கைவண்ணமும்.**

திட்டமிட்டு ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க உதவும் **செயல்திட்டம்.**









மாணவர்கள் புதிய செய்திகளை அறிந்து கொள்ள உதவும் **அறிந்து கொள்வோமா?**

ஒற்றுமையுடன் சேர்ந்து செயல்பட உதவும் **இணைந்து செய்வோம்**




புதிய பாடநூலில் இவைபோன்ற பல புதிய செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளன.


கற்பிக்க வேண்டிய திறன்கள் அந்தந்தப் பாடப் பகுதியிலும் பெற வேண்டிய கற்றல் விளைவுகள் பாடநூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. விழுமியங்களும் வாழ்வியல் திறன்களும் பாடப் பகுதிகளில் பேசப்பட்டுள்ளன.

**பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?**

QR GUIDE

- உங்கள் திறன் பேசியில் கூகுள் playstore கொண்டு DIKSHA செயலியை பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்திப் பாடநூலில் உள்ள விரைவுக் குறியீடுகளை ஸ்கேன் செய்யவும்.
- திரையில் தோன்றும் கேமராவைப் பாடநூலின் QR Code அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம். அந்த QR Code உடன் இணைக்கப்பட்டுள்ள மின் பாடப் பகுதிகளைப் பயன்படுத்தலாம்.

குறிப்பு: இணையச்செயல்பாடுகள் மற்றும் இணைய வளங்களுக்கான QR code களை Scan செய்ய DIKSHA அல்லாத ஏதேனும் ஓர் QR code Scanner பயன்படுத்தவும்.



மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலாலும்
இனிமையான கற்றல் கற்பித்தல் முறைகளாலும்
ஆசிரியர்களின் அனுபவ ஆற்றலாலும் அறிவார்ந்த
சமூகம் அமையட்டும்

வாழ்த்துகள்..!

ஆக்கியோர்.



# பொருளடக்கம்


| வ எண் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | தமிழ் அமுது | 1 |
| 2. | கண்ணன் செய்த உதவி | 7 |
| 3. | தனித்திறமை | 13 |
| 4. | கல்யாணமாம் கல்யாணம்! | 22 |
| 5. | மாணவர்கள் நினைத்தால்... | 27 |
| 6. | துணிந்தவர் வெற்றி கொள்வர் | 33 |
| 7. | சான்றோர் மொழி | 40 |
| 8. | நூலகம் | 44 |
| 9. | மாட்டு வண்டியிலே... | 52 |
|  | அகரமுதலி | 59 |


P1P9IX

மின்னூல்

AF8VQE

மதிப்பீடு

B313_3_TAMIL_LANG

இணைய வளங்கள்




# 1 தமிழ் அமுது

தோண்டுகின்ற போதெல்லாம்
சுரக்கின்ற செந்தமிழே!
வேண்டுகின்ற போதெல்லாம்
விளைகின்ற நித்திலமே!
உன்னைத் தவிர
உலகில் எனைக் காக்க
பொன்னோ! பொருளோ!
போற்றி வைக்க வில்லையம்மா!.

– கவிஞர் கண்ணதாசன்

## பாடல் பொருள்

தோண்டுகின்ற பொழுதெல்லாம் ஊற்றைப்போல் சுரக்கின்ற செந்தமிழே! தேவைப்படும் பொழுதெல்லாம் விளைகின்ற முத்தே! உன்னை அன்றி இவ்வுலகில் என்னைக் காக்க வேறு பொன்னையோ பொருளையோ சேர்த்து வைக்கவில்லை, என்னைக் காத்திடுவாய் அம்மா.

KM17BM

## வாங்க பேசலாம்

நீங்கள் நினைப்பதை எவ்வாறு வெளிப்படுத்துவீர்.

உமக்கு தெரிந்த தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும் பாடல் ஒன்றை கூறுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. நித்திலம் இச்்சொல்லின் பொருள் ..........................

(அ) பவளம் (ஆ) முத்து (இ) தங்கம் (ஈ) வைரம்

2. செந்தமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) செம்மை + தமிழ் (ஆ) செந் + தமிழ்


(இ) செ + தமிழ் (ஈ) செம் + தமிழ்

3. உன்னை + தவிர என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............................

(அ) உன்னைத் தவிர (ஆ) உனைத்தவிர

(இ) உன்னை தவிர (ஈ) உனை தவிர

### இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோமா...



## கலைந்துள்ள எழுத்துகளை வரிசைப்படுத்திச் சொல்லை உருவாக்குக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ.கா | பொ | ள் | ன் | பொ | ரு | பொன்பொருள் |
| 1. | செ | ழ் | மி | த | ந் | |
| 2. | ண | வ | கு | ங் | | |
| 3. | போ | றி | ற் | | | |
| 4. | தி | ம் | த் | ல | நி | |
| 5. | உ | கி | ல் | ல | | |

## மீண்டும் மீண்டும் சொல்லலாமா?












## ஆடிப் பாடி மகிழ்வோம்!

அத்திப்பழத் தேன் எடுப்போம்
ஆலமர விழு தாவோம்
இசைவோடு பள்ளி செல்வோம்
ஈகையோடு நட்பு செய்வோம்
உவகையாய் கற்றிடுவோம்
ஊர் முழுதும் சுற்றிடுவோம்
எல்லோரும் சேர்ந்திடுவோம்
ஏட்டினிலே பாட்டு செய்வோம்
ஐவகை நிலம் செழிக்க
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
ஓடம் விட்டுக் களித்திடுவோம்
ஔவை மொழி கற்றிடுவோம்
எஃகாய் உறுதி கொள்வோம்



Z8GK56

# உன்னை அறிந்துகொள்

1. எனது நாடு ....................................
2. எனது மாநிலம் ....................................................
3. எனது மாவட்டம் ................................................................
4. எனது ஊர் .......................................................................
5. எனது மொழி ..............................................................................
6. எனது பள்ளி ................................................................................
7. எனது வகுப்பு ..................................................................................
8. என் ஆசிரியர் ....................................................................................
9. என் நண்பர்கள் ...................................................................................
10. வீட்டில் எனக்குப் பிடித்தவை ..................................................................................
11. பள்ளியில் எனக்குப் பிடித்தவை ..............................................................................
12. எனது திறமைகள் .......................................................................
13. என் பெற்றோர் ................................................................
14. பெற்றோர் அலைபேசி எண் ............................

# மொழியோடு விளையாடு

## "தொட்டால் சுருங்கி"

மாணவர்கள் வட்டமாக நிற்க வேண்டும். ஒரு மாணவன் வட்டத்திற்கு வெளியே சுற்றி ஓடி வரவேண்டும். ஓடி வரும் மாணவன் நிற்கின்ற யாராவது ஒரு மாணவன் முதுகில் தொட்டு ஒரு சொல்லைக் கூற வேண்டும். அந்தச் சொல்லில் முடியும் எழுத்தை முதலாகக்கொண்டு வேறு சொல்லைத் தொடப்பட்ட மாணவன் கூற வேண்டும். அவன் சொல்லைக் கூறிவிட்டால் ஓடி வரும் மாணவனே மீண்டும் ஓடி வந்து வேறு மாணவனைத் தொட்டு வேறு சொல் கூற வேண்டும். தொடப்பட்டவன் சரியாகக் கூற வில்லையென்றால் அவன் ஓடிவர வேண்டும். இவ்வாறே விளையாட்டைத் தொடரலாம்.



எ.கா: விலங்கு என்று சொன்னால் குருவி என்று சொல்ல வேண்டும்.



### செயல் திட்டம்

**கேட்டு, எழுதி வரலாமா. . .**
தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும் பாடல்கள் இரண்டை எழுதி வருக

# 2 கண்ணன் செய்த உதவி




கதிரவனின் ஒளி எங்கும் படர்ந்திருந்தது. பறவைகள் ஒலியெழுப்பிப் பறந்தன. காலை வேளையில் கண்ணன் பள்ளிக்குப் புறப்பட்டான். அவன் செல்லும் வழியில் ஒரு பெரியவரைப் பார்த்தான். அந்தப் பெரியவர் "சாலையைக் கடக்க உதவ வேண்டும்" என்று அவனிடம் கேட்டார்.



"வாருங்கள் போகலாம்" என்று கூறிய கண்ணன், அவரது கையைப் பிடித்துக்கொண்டு பாதுகாப்பாக எதிர்ப்புறத்தில் விடுவதற்குச் சென்றான். அப்போது எதிரே ஒரு பேருந்து வேகமாக வந்தது. ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த அந்தப் பேருந்து பக்கத்தில் இருந்த மரத்தில் மோதியது. உடனே கண்ணன் கத்தினான்.

அறிந்த தகவல்களையும், செய்திகளையும் சரியான ஒலிப்புடன் தங்கு தடையின்றிக் கலவைத் தொடரில் பேசுதல்...

என்ன செய்வது
என்று தெரியாமல்
"ஐயோ காப்பாற்றுங்கள்
காப்பாற்றுங்கள்" என்று
உரக்கக் கத்தினான், உடனே
அந்தப் பெரியவர் தன்
பையிலிருந்து செல்பேசியை
எடுத்தார். பின் 108 என்ற
எண்ணிற்குத் தொடர்பு
கொண்டு பேசினார்.
அடுத்த சிறிதுநேரத்தில்
அவசர ஊர்தி வந்தது.
காவலர்களும் வந்தனர்.
பேருந்தில் காயம்
அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்த்தனர்.




இதனைப் பார்த்த கண்ணன் பேருந்தில் இருந்தவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தான். அதன்பிறகு பள்ளிக்குச் சென்றான். ஆசிரியர் கண்ணனைப் பார்த்து "ஏன் தாமதமாக வருகிறாய்?" எனக் கேட்டார்.



கண்ணன் நடந்தவற்றைத் தெளிவாகக் கூறினான். ஆசிரியர் அவனைப் பாராட்டினார். கண்ணன் மகிழ்ச்சியடைந்தான்.

"மாணவர்களே! நீங்களும் உங்களால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்ய வேண்டும். அதுவே மகிழ்ச்சியைத் தரும்" என்றார். மாணவர்கள் அனைவரும் கையைத் தட்டி கண்ணனுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

## வாங்க பேசலாம்

- கண்ணனைப் போல நீ யாருக்காவது உதவி செய்திருக்கிறாயா? உனது அனுபவத்தைக் கூறு
- உனது ஊரில் 108 வாகனத்தைப் பார்த்திருக்கிறாயா?. எதற்காக வந்தது? கலந்துரையாடு.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. கதிரவன் இச்சொல் உணர்த்தும் பொருள் ................

| | | | |
|---|---|---|---|
| (அ) | சந்திரன் | (ஆ) | சூரியன் |
| (இ) | விண்மீன் | (ஈ) | நெற்கதிர் |

2. மகிழ்ச்சியடைந்தான் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......................................

| | | | |
|---|---|---|---|
| (அ) | மகிழ்ச்சி + அடைந்தான் | (ஆ) | மகிழ்ச்சி + யடைந்தான் |
| (இ) | மகிழ்ச்சியை + அடைந்தான் | (ஈ) | மகிழ்ச்சியை + யடைந்தான் |

3. ஒலியெழுப்பி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............................

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஒலி + யெழுப்பி | (ஆ) | ஒலி + எழுப்பி |
| (இ) | ஒலியை + யெழுப்பி | (ஈ) | ஒலியை + எழுப்பி |

SFDBR8

### பொருத்தமான குறியிடுக.
### (✓) சரி, (✗) தவறு.

1. கண்ணன் பெரியவருக்குச் சாலையைக் கடக்க உதவினான். ☐
2. கண்ணன் பள்ளிக்கு நேரத்தோடு வந்து விட்டான். ☐
3. பெரியவர் அலைபேசியில் 107ஐ அழைத்தார். ☐
4. ஆசிரியரும் மாணவர்களும் கண்ணனைப் பாராட்டினர். ☐


# அகர முதலியைப் பார்த்துப் பொருள் வேறுபாடு அறிக




1. ஒலி: ...............................................
2. ஒளி: ...............................................



3. பள்ளி: ...............................................
4. பல்லி: ...............................................



5. காலை: ...............................................
6. காளை: ...............................................



## சரியான சொல்லால் நிரப்பிப் படி

1. ஒட்டகச்சிவிங்கி மிகவும் __________.
2. அதன் கழுத்து __________ இருக்கும்.
3. ஒட்டகச்சிவிங்குக்குக் குரல்நாண் இருந்தாலும் அதனால் சத்தம் போட்டு __________ முடியாது.
4. ஒரு சிங்கத்தையே காலால் தாக்கிக் கொல்லும் அளவுக்கு __________ வாய்ந்தது.
5. ஒட்டகச்சிவிங்கி __________ தின்னும்.

(வலிமை, கத்த, இலைதழைகளைத், நீளமாக, உயரமானது)

## வினாக்களுக்கு விடையளி

1. கண்ணன் எங்குப் புறப்பட்டான்?

2. பள்ளி செல்லும் வழியில் கண்ணன் யாரைப் பார்த்தான்?

3. பேருந்து எதில் மோதியது?

4. பெரியவர் எந்த எண்ணிற்குச் செல்பேசியில் பேசினார்?

5. ஆசிரியர் கண்ணனை எதற்காகப் பாராட்டினார்?







## உன்னை அறிந்துகொள்


நீ உன் வீட்டில் யாருக்கு என்ன உதவிகளைச் செய்கிறாய்? வகுப்பறையில் கலந்துரையாடு.


# சொல் விளையாட்டு

வாத்தில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.

எ. கா: நகை

1. 
2. 
3. 
4. 
5. 
6. 



**சிந்திக்கலாமா?**

அகில் பள்ளியில் படிக்கும் சிறுவன். அவனுக்கு உயிர்களிடத்தில் அன்பு காட்டுவதும். பிறருக்கு உதவி செய்வதும் பிடிக்கும். ஆனால் அவன் பெற்றோர்கள், அகில் சிறுவன் என்பதால், அவனுக்கு ஆபத்து ஏதேனும் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுகின்றனர்.

அவர்களின் பயம் சரியானதா?
இல்லையா? ஏன்?

# 3 தனித்திறமை

காட்டின் ராஜாவான சிங்கம் சில நாள்கள் வெளியூர் சென்றபோது புலிக்குத் தனது பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டுச் சென்றது. புலியும் சில நாள்கள் ராஜாவாகப் பதவி ஏற்று கொண்டது. படைத்தளபதியாகச் சிங்கக் குட்டி பொறுப்பேற்றது.






கழுதையாரே ...... உமக்கு உரிய ...... பதவி
ராஜாவே..! ராஜாவே..! இந்தக் கழுதை ஒரு முட்டாள். கழுதையால் எந்த ஒரு பயனும் இல்லை.
அப்படியா...!
இதே போல் முயல், ஆமை இரண்டும் எதற்கும் பயன்படாது.




பண்புகளை வளர்த்தல்

**நீதிக் கருத்து:**

**ஒவ்வொருவருக்கும் தனித்திறமை உண்டு. அதை அறிந்து சூழ்நிலைக்கு ஏற்பப் பயன்படுத்த வேண்டும்.**

## வாங்க பேசலாம்

காட்டின் அரசனாக சிங்கமே இருக்க வேண்டுமா?
புலி காட்டுக்கு அரசனாக இருப்பது குறித்து உனது கருத்து என்ன?
வகுப்பறையில் விவாதிக்க...

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தகுதி இச்சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) தரம் (ஆ) மரம்
(இ) கரம் (ஈ) வரம்

2. பகைவர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல் ........................................

(அ) நண்பர்கள் (ஆ) எதிரிகள்
(இ) அயலவர்கள் (ஈ) சகோதரர்கள்

3. பணி இச்சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) வாழை (ஆ) வேளை
(இ) வேலை (ஈ) வாளை

4. படைத்தளபதி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

(அ) படைத் + தளபதி (ஆ) படை + தளபதி
(இ) படையின் + தளபதி (ஈ) படைத்த + தளபதி

5. எதை + பார்த்தாலும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........................................

(அ) எதைபார்த்தாலும் (ஆ) எதபார்த்தாலும்
(இ) எதைப்பார்த்தாலும் (ஈ) எதைபார்தாலும்

## வினாக்களுக்கு விடையளி

1. காட்டில் விலங்குகளின் கூட்டம் யார் தலைமையில் நடைபெற்றது?

2. புலிராஜா, படைத்தளபதி பொறுப்பை யாருக்குக் கொடுத்தார்?

3. ஆந்தைக்கு என்ன பதவி கொடுக்கப்பட்டது?

4. கரடி எந்தெந்த விலங்குகள் தகுதியற்றவை எனக் கூறியது?


5. இந்தக் கதையின் மூலம் நீ அறிந்து கொள்வது யாது?

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

பதுங்கிச் செல்வேன். பாய்ந்து இரையைப் பிடிப்பேன், நான் யார்?



இரவில் விழித்தும் பகலில் தூங்கியும் வாழ்வேன், என் கண்களை எல்லாத்திசையிலும் திருப்புவேன், நான் யார்?



என் காதுகள் நீண்டிருக்கும் வேகமாக ஓடுவேன், கேரட் எனக்கு மிகவும் பிடிக்கும், நான் யார்?



## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக


1. காட்டில் விலங்குகள் நடந்தது கூட்டம்

2. இரவுக்காவல் நீங்கள்தாம் அமைச்சர் ஆந்தையாரே

3. முயல் ஓடும் வேகமாக அதி

4. கூடாது யாரையும் போடக் எடை குறைவாக


## எந்த விலங்கிற்கு, எந்தப் பணி?

| | விலங்குகள் | | பணிகள் |
|---|---|---|---|
| 1. |  | – | பொருள்களைச் சேகரிக்கும் வேலை |
| 2. |  | – | எச்சரிக்கைப் பணி |
| 3. |  | – | படைத்தளபதி |
| 4. |  | – | இரவுக்காவல் |
| 5. |  | – | சமையல் வேலை |

## பெயர் எது? செயல் எது?

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குழலி பாடம் படித்தாள். | ________<br>________ | ________ |
| 2. | அமுதன் பந்து விளையாடினான். | ________<br>________ | ________ |
| 3. | மரம் செழித்து வளர்ந்தது. | ________ | ________<br>________ |

## மொழியோடு விளையாடு



மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவேண்டும் . முதல் குழுவினருக்கு விலங்குகள் மற்றும் பறவைகளின் பெயர் எழுதப்பட்ட அட்டையினை ஒவ்வொரு மாணவனுக்கும் ஒன்று வீதம் கொடுக்க வேண்டும். ஆசிரியர் ஒலிப்பான் மூலம் ஒலி எழுப்பியவுடன் முதல் குழுவில் இருந்து ஒரு மாணவன் தனது அட்டையில் எழுதப்பட்டு உள்ள விலங்கு (அ) பறவை போல நடித்து (அ) ஒலி எழுப்பிக் காட்ட வேண்டும். நடிக்கும் விதத்தை (அ) ஒலியைக் கேட்டு அது என்ன விலங்கு? (அ) பறவை? என்பதனை இரண்டாவது குழுவினர் கண்டறிந்து கூறவேண்டும். இவ்வாறே அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.




# எழுத்துகளின் வகைகள் அறிவோமா?

DTWXXP

குழந்தைகளே! நமக்கெல்லாம் பெயர் இருக்கிறது அல்லவா...
அதுபோல எழுத்துகளுக்கும் பெயர் வைக்கலாமா..
தமிழில் உள்ள உயிரெழுத்துகள் மொத்தம் – 12




இதில்








இந்த ஐந்து எழுத்துகளும் ஓசையில் குறுகி ஒலிக்கின்றன எனவே இவற்றிற்குக் குறில் அல்லது குற்றெழுத்துகள் என்று பெயரிடுவோம்.




இந்த ஏழு எழுத்துகளும் ஓசையில் நீண்டு ஒலிக்கின்றன இவற்றிற்கு நெடில் அல்லது நெட்டெழுத்துகள் என்று பெயரிடுவோம்..

இப்பொழுது மெய்யெழுத்துகளுக்குப் பெயரிடுவோமா...
தமிழில் உள்ள மெய்யெழுத்துகள் மொத்தம் – 18.




இவை ஒலிக்கும் தன்மையை வைத்து மூன்று வகைகளாகப் பிரித்துப் பெயரிடுவோம்.


## வல்லினம்






யானைகள் எப்படி வலிமையாக இருக்கின்றனவோ அப்படியே க், ச், ட், த், ப், ற் – என்ற எழுத்துகளும் வலிய ஓசை உடையவை, எனவே இவற்றுக்கு வல்லினம் என்று பெயரிடுவோம்.

## மெல்லினம்






முயல்கள் எப்படி மென்மையாக இருக்கின்றனவோ அப்படியே ங் ஞ், ண், ந், ம், ன் – என்ற எழுத்துகளும் மெல்லிய ஓசை உடையவை. எனவே இவற்றுக்கு மெல்லினம் என்று பெயரிடுவோம்.

## இடையினம்




மான்கள் யானையைப் போன்று வலிமையாகவும் இல்லை, முயலைப் போன்று மென்மையாகவும் இல்லை, இடைப்பட்ட நிலையில் இருக்கின்றன.

அது போல ய், ர், ல், வ், ழ், ள் – என்ற எழுத்துகளும், வன்மையாகவும் இல்லாமல் மென்மையாகவும் இல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையதால் இவற்றுக்கு இடையினம் என்று பெயரிடுவோம்.



ஃ என்பது ஆய்த எழுத்து அல்லது தனிநிலை எனப்படும்.

எழுத்துகளின் பெயர்கள் இனிமையாக இருக்கின்றன அப்படித்தானே.

உங்கள் பெயரிலும் உங்கள் நண்பர்களின் பெயர்களிலும் இடம்பெற்றுள்ள மெய்யெழுத்துக்களை வட்டமிட்டுக் காட்டுக

# 4 கல்யாணமாம் கல்யாணம்!

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்
யானை மேலே ஊர்கோலமாம்
ஒட்டகச்சிவிங்கி நாட்டியமாம்
கொர்கொர் குரங்கு பின்பாட்டாம்
தடபுடலான சாப்பாடாம்





தாலிகட்டும் வேளையிலே
மாப்பிள்ளை பூனையக் காணோமாம்
சந்தடி புந்தடி செய்யாமல்
சமையல்கட்டில் நுழைந்தாராம்
வாங்கிவச்சப் பாலையெல்லாம்
ஒரே மூச்சில் குடித்தாராம்



பார்த்துவிட்ட பெண்ணின் தாயும்
பலத்த சத்தம் போட்டாராம்
திருட்டு மாப்பிள்ளைக்கு என் பெண்ணை
திருமணம் செய்ய முடியாது
வேண்டாம் இந்த சம்பந்தம்
வெட்கக்கேடு போய் வாரோம்

– நாட்டுப்புறப் பாடல்




## வாங்க பேசலாம்

- இப்பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க.
- உனது பகுதியில் வழங்கும் உனக்குப் பிடித்த நாட்டுப்புறப் பாடல்களை அறிந்து வகுப்பறையில் பாடுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.



கல்யாணமாம் ____________

____________ ____________

____________ ____________

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. பூலோகமெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

(அ) பூலோக + மெல்லாம் (ஆ) பூலோகம் + மெல்லாம்

(இ) பூலோகம் + எல்லாம் (ஈ) பூலோக + எல்லாம்

2. கல்யாணத்தில் நாட்டியமாடுபவர் ..........................................

(அ) பூனை (ஆ) ஒட்டகச்சிவிங்கி

(இ) யானை (ஈ) குரங்கு

3. பாலை + எல்லாம் இதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........................

(அ) பாலையெல்லாம் (ஆ) பாலைஎல்லாம்


(இ) பாலைல்லாம் (ஈ) பாலெல்லாம்

## இணைந்து செய்வோம்

கோப்பைகளை அவற்றின் சரியான தட்டுகளோடு பொருத்துக:

| | | |
|---|---|---|
| காணோமாம் | ________________ | வருகிறோம் |
| வாங்கி வச்ச | ________________ | பூனையை |
| வாறோம் | ________________ | வாங்கிவைத்த |
| பூனைய | ________________ | காணவில்லையாம் |

### சிந்திக்கலாமா?




இப்பாடலில் வரும் பூனைக்கும் பூனைக்கும் பதிலாக யானைக்கும் பூனைக்கும் கல்யாணம் ஏற்பாடு செய்திருந்தால் எவ்வாறு இருக்கும்?

வகுப்பறையில் பேசுக...



## வண்ணமிட்டு மகிழ்க





### செயல் திட்டம்

உமது பகுதியில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகள் இரண்டினை அறிந்து வருக.

# 5 மாணவர்கள் நினைத்தால்...



சிறுமி மேரி மகிழ்வோடு துள்ளிக் குதித்து ஓடிவந்தாள், தனது தோழி மகிழினியைப் பார்க்க... அவளிடம், "இன்று காலை எங்கள் வீட்டுப்பசு கன்று ஈன்றுள்ளது, இனி நான் எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியுடன் விளையாடுவேன்" என்றாள். அதைக்கேட்ட மகிழினி, "என்னையும் விளையாட்டில் சேர்த்துக் கொள்" என்றாள்.

அப்போது மேரியின் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் ஒரே கும்பல்......ஓடிச்சென்று பார்த்தனர் அவர்கள் கண்ட காட்சி கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்வதாக இருந்தது...... கன்றை ஈன்ற பசு தனது கழிவினை வெளியே தள்ள முடியாமல் இறந்துபோயிருந்தது. பாதி வெளிவந்திருந்த கழிவில் நிறைய நெகிழிக் குப்பைகள் காணப்பட்டன. அந்நெகிழியால் தான் இறப்பு ஏற்பட்டதாகக் கால்நடை மருத்துவர் கூறிக் கொண்டிருந்தார்.

H8L15Z

வேதனையுடன் பள்ளிக்குச் சென்றனர் மேரியும் மகிழினியும். சோகமாக அமர்ந்திருந்த இருவரையும் அழைத்துக் காரணம் கேட்டார் வகுப்பு ஆசிரியர். பிறகு, "நெகிழிகளைப் பயன்படுத்துவதால் பல தீமைகள் ஏற்படுகின்றன. மட்காத இந்தக் குப்பைகளால் சாக்கடைகளில் நீர்தேங்கி துர்நாற்றம் வீசுவதோடு, ஈ மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகி நோய் பரவுகிறது. நெகிழிக் குப்பைகளை எரிப்பதால் ஓசோன் படலம் பாதிப்படைகிறது. இதனால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரடியாக நம்மைத் தாக்குகிறது. இதனால் தோல் நோய்கள் ஏற்படுகின்றன", என்று விளக்கினார். இதுபற்றிப் பேசிக்கொண்டிருப்பதை விட்டு விட்டுச் செயலில் இறங்குவோம் என்றார். பள்ளியின் நலன் காக்கும் பள்ளி மேலாண்மைக் குழுவினைக் கூட்டி, நெகிழி பற்றிய தீமைகளை எடுத்துரைத்தார்.

பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், ஊர்ப் பொதுமக்கள் ஆகியோரைக் கொண்டு நெகிழி விழிப்புணர்வு பேரணி நடத்தத்

தமக்கு அறிமுகமான செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும் தங்கு தடையின்றியும் படித்தல், விவரித்தல்




தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவரும் விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி வாசகங்களைக் கூறிக் கொண்டே கிராமத்தின் அனைத்துத் தெருக்களிலும் பேரணியாக வந்தனர்.

இம்மாதிரியான விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களைப் பொதுமக்களிடம் கொடுத்து நெகிழியின் தீமைகளை எடுத்துக் கூறினர். மேலும் ஒவ்வொரு மாணவனும் பயன்படுத்தப்பட்ட காகிதங்களைக் கொண்டு பைகள் செய்து வைத்திருந்தனர் . அதனை அவ்வூரின் அனைத்துக் கடைகளிலும் கொடுத்து அந்தப் பைகளைப் பயன்படுத்தச் சொல்லி நெகிழியின் தீமைகளை எடுத்துக் கூறினர். உள்ளூர் மக்களிடம் இனி கடைகளில் பொருட்கள் வாங்கும்போது துணிப்பைகளைக் கொண்டு செல்ல அறிவுறுத்தினர்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்ற ஆன்றோரின் வாக்கிற்கு ஏற்ப இச்சிறு பிள்ளைகளின் முயற்சியால் அந்த ஊர் நெகிழியற்ற ஊராக மாறி வருகிறது ..........



## வாங்க பேசலாம்

- நெகிழியினால் ஏற்படும் தீமைகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
- நெகிழியை அவசியம் பயன்படுத்த வேண்டும் என்ற இடங்களாக எவற்றைக் கருதுகிறாய்? அவ்விடங்களில் நெகிழிக்குப் பதிலாக வேறு என்ன பொருள்களைப் பயன்படுத்தலாம் என வகுப்பறையில் கலந்துரையாடுக.



# படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. முயற்சி இச்சொல்லின் பொருள் ........................................

(அ) ஆக்கம் (ஆ) இடைவிடாத உழைப்பு

(இ) இயக்கம் (ஈ) பக்கம்

2. ஆன்றோர் இச்சொல்லின் பொருள் ........................................

(அ) பெற்றோர் (ஆ) உற்றோர்

(இ) சுற்றோர் (ஈ) பெரியோர்

3. வைத்திருந்தனர் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................................

(அ) வைத்து + யிருந்தனர் (ஆ) வைத் + இருந்தனர்

(இ) வைத்து + இருந்தனர் (ஈ) வைத் + திருந்தனர்

4. வீதியெங்கும் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....................................

(அ) வீதி + எங்கும் (ஆ) வீதி + யெங்கும்

(இ) வீதியெ + ங்கும் (ஈ) வீதி + அங்கும்

5. நெகிழி + அற்ற என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................................

(அ) நெகிழிஅற்ற (ஆ) நெகிழியற்ற

(இ) நெகிழ்அற்ற (ஈ) நெகிழ்யற்ற

6. பாதிப்பு + அடைகிறது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................................

(அ) பாதிப்அடைகிறது (ஆ) பாதிப்புஅடைகிறது

(இ) பாதிப்படைகிறது (ஈ) பாதிபடைகிறது

71TPJR

## வினாக்களுக்கு விடையளி

1. மேரி இனி யாருடன் விளையாடப் போவதாகக் கூறினாள்?

2. பசு எதனால் இறந்தது?

3. நெகிழியினால் ஏற்படும் தீமைகள் இரண்டினை எழுதுக.

4. நெகிழி விழிப்புணர்வு வாசகம் ஒன்றினை உருவாக்குக.

## பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புக

1. நெகிழியற்ற ............................................ உருவாக்குவோம். (உலகை / உளகை)

2. நெகிழியை ஒழிப்போம் ........................................ காப்போம். (மன்வளம் / மண்வளம்)

3. மேரி ..................................... குதித்து ஓடிவந்தாள். (மகிள்வோடு / மகிழ்வோடு)

4. எறும்பு ............................................ கல்லும் தேயும். (ஊரக் / ஊறக்)

5. துணிப்பை என்பது ............................................ (எளிதானது / எலிதானது)



**செயல் திட்டம்**

மட்கும் பொருள்களைக் கொண்டு பைகள், கூடைகள் போன்றவற்றினை உமது பெற்றோர் உதவியுடன் செய்து வருக.